**ஜூலை– 01**

# தேசியச் செய்திகள்

## UNESCO உலக பாரம்பரியப் பட்டியல்

- மும்பை மற்றும் மகாராஷ்ட்ராவில் உள்ள இரண்டுக் கட்டிடத் தொகுப்புகளான விக்டோரியா கோதிக் (Victoria Gothic) மற்றும் டெகோ கலை (Art Deco) எனும் கட்டிடக்கலை பாணிகள் ஆகிய இரண்டும் UNESCO-ன் உலக பாரம்பரியப் பட்டியலில் பொறிக்கப்பட்டுள்ளன.
- இந்த முடிவானது பஃக்ரைனில் உள்ள மனாமாவில் நடைபெற்ற UNESCO உலக பாரம்பரியத்திற்கானக் குழுவின் 42வது அமர்வின் போது எடுக்கப்பட்டது.
- அவுங்கராபாத்தில் உள்ள அஜந்தா மற்றும் எல்லோரா குகைகள் ஆகியவற்றுடன் சேர்த்து மகாராஷ்டிரா இந்தியாவிலேயே அதிக உலக பாரம்பரியத் தளங்களைக் கொண்டுள்ளது. மஹாராஷ்டிராவின் ஐந்து தளங்களில் மும்பை மூன்று தளங்களைக் கொண்டுள்ளது.



- 19-ம் நூற்றாண்டின் கோதிக் கட்டடமைப்பு மற்றும் 20-ம் நூற்றாண்டின் டெகோ கலைசார்ந்த கட்டிடக்கலை ஆகிய இரண்டும் ஒன்றிணைந்த உலகின் முதல் பாரம்பரியத் தளமாக இந்த தளம் கூறப்படுகிறது.
- மும்பையின் எலிபென்டா குகைகள் மற்றும் விக்டோரியா முனையம் (சத்ரபதி சிவாஜி ரயில் நிலையம் என்று பெயரிடப்பட்டுள்ளது) ஆகியவை 1987 மற்றும் 2004-களில் பிரபல முகவரியைப் பெற்றன. இதற்குப் பிறகு கிடைக்கும் மூன்றாவது கௌரவம் இதுவாகும்.
- இதனுடன் டெல்லிக்கு நிகரான உலகப் பாரம்பரியத் தளங்களை மும்பை கொண்டுள்ளது. டெல்லியின் பாரம்பரியத் தளங்கள் செங்கோட்டை, குதுப்மினார்

மற்றும் ஹுமாயுன் கல்லறை ஆகியனவாகும்.

- இத்துடன் இந்தியாவில் உள்ள பாரம்பரிய தளங்களின் எண்ணிக்கை 37 ஆக உயர்ந்துள்ளது. இதில் 27 கலாச்சாரம் சார்ந்ததாகவும் 7 இயற்கை சார்ந்ததாகவும் மற்றும் ஒன்று இரண்டும் சேர்ந்த கலப்பாகவும் உள்ளன.
- இவற்றின் சேர்ப்பானது உலக பாரம்பரியப் பட்டியலில் இந்தியாவை ஏழாவது இடத்திற்கு உயர்த்தியுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## உலக சகிப்புத் தன்மை உச்சி மாநாடு

- ஒருங்கிணைந்த அரபு நாடுகள், நவம்பர் மாதம் உலக சகிப்புத் தன்மை உச்சிமாநாட்டினைத் தொகுத்து அளிக்க உள்ளது.
- இந்த உச்சி மாநாட்டின் கருத்துரு "பன்மைத்துவத்திலிருந்து வளம் பெறுதல் : புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் ஒத்துழைப்பின் மூலம் பன்முகத் தன்மையைத் தழுவுதல்" ("Prospering from pluralism : Embracing Diversity through innovation & Collaboration")
- இந்த உச்சிமாநாடு, நவம்பர் 15-16, 2018-ல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது சர்வதேச சகிப்புத் தன்மை தினமான நவம்பர் 16-ம் தேதியினை ஒத்திருக்கும்.

## AIIB -ன் 4வது வருடாந்திர சந்திப்பு

- ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் (AIIB - Asian Infrastructure Investment Bank) 4வது வருடாந்திர சந்திப்பு ஆசியாவிற்கு வெளியில் முதன்முதலாக லக்ஸம்பர்க்கில் ஜூலை 2019-ல் நடைபெற உள்ளது.




- லக்ஸம்பர்க் AIIB-ன் ஸ்தாபன உறுப்பினர் ஆகும். அதுமட்டுமின்றி ஐரோப்பா மற்றும்

ஆசிய நாடுகளுக்கிடையேயான முன்னணி நிதி நிறுவனம் மற்றும் முதலீட்டு அனுசரணையாளர் ஆகும்.

- AIIB குழுவின் முதல் சந்திப்பு 2016-ம் ஆண்டு பெய்ஜிங்-ல் நடைபெற்றது. அதன் பிறகு தென் கொரியாவில் உள்ள ஜெஜூ – ல் 2017-ம் ஆண்டு நடைபெற்றது மற்றும் சமீபத்தில் மும்பையில் இரண்டு நாள் சந்திப்பாக நடைபெற்றது.
- பலதரப்பு மேம்பாட்டு வங்கியான AIIB, பெய்ஜிங்கை தலையிடமாகக் கொண்டுள்ளது. ஆசியா மற்றும் அதற்கு அப்பால் உள்ள நாடுகளில் சமூக மற்றும் பொருளாதார விளைவுகளில் முன்னேற்றம் காண்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

## உலக பாரம்பரியக் குழுவின் (WHC) 42வது அமர்வு


- பெஹ்ரைன்-ல் உள்ள மனாமாவில் நடைபெற்ற UNESCO-ன் உலக பாரம்பரியக் குழுவின் 42வது அமர்வில் நான்கு கலாச்சாரம் சார்ந்த தளங்கள் உலக பாரம்பரியத் தளங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.
- அந்த நான்கு தளங்களாவன,
    - விக்டோரியன் கோதிக் மற்றும் டெகோ கலைக் குழுமம், மும்பை (இந்தியா)
    - பார்ஸ் பகுதியில் உள்ள சாசானிடு தொல்பொருள் ஆய்வுப் பகுதி (ஈரான்)
    - நாகசாகிப் பகுதியிலுள்ள மறைந்துள்ள கிருத்துவ தளம் (ஜப்பான்) மற்றும்
    - கொரியாவில் உள்ள சான்சா புத்தமத மலைத் துறவிகளின் மடம் (தென் கொரியா)

# பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## உலக உணவுப் பரிசு 2018

- உணவு பாதுகாப்பு நிலைக்குள்ளேயே தாய் மற்றும் சேய் ஊட்டச்சத்துக் குறைபாட்டினை போக்கியதற்காக லாரன்ஸ் ஹாடாடு மற்றும் Dr.டேவிட் நெபேரோ ஆகியோரின் தனிப்பட்ட மற்றும் தலைசிறந்த தலைமைக்காக உலக உணவுப் பரிசு- 2018 வழங்கப்பட்டுள்ளது.
- பசியைப் போக்குதல் மற்றும் உலகளாவிய உணவுப் பாதுகாப்பினை மேம்படுத்துதல் ஆகியவற்றில் வெற்றி கண்ட தனிப்பட்ட நபர்களுக்கு வழங்கப்படும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த உலகளாவிய விருது உலக உணவுப் பரிசு ஆகும்.
- இது 1986-ல் நோபல் பரிசு பெற்ற நார்மன் போர்லாக்-ஆல் (பசுமைப் புரட்சியின் தந்தை என்றழைக்கப்படுபவர்) உருவாக்கப்பட்டது.
- இதன் உருவாக்கத்திலிருந்து 7 இந்தியர்கள் இந்தப் பரிசினை வென்றுள்ளனர். பேராசியர் M.S.சுவாமிநாதன் இந்தப் பரிசினை முதலில் பெற்றவர் (1987) ஆவார்.
- இந்த வருடம் 2,50,000 டாலர்கள் மதிப்பிலான பரிசுத் தொகை இருவருக்கும் பகிர்ந்தளிக்கப்படும்.

------------------------------
June 2018 - Current Affairs Compilation available for download at www.tnpscthervupettagam.com
Click here for the download link




## காளிதாஸ் சம்மன்

- மத்தியப் பிரதேச அரசு ஒளிச் சித்திரக் கலையில், அஞ்சோலி எலா டேனனின் (78) குறிப்பிடத் தகுந்த பங்களிப்பிற்காக தலைசிறந்த விருதான தேசிய காளிதாஸ் சம்மன் விருதினை வழங்கியுள்ளது.



- பெண்களின் அடையாளம் மற்றும் மகிமையினை உள்ளார்ந்த மற்றும் உணர்ச்சிப் பூர்வமான அர்த்தமுள்ள சித்திரங்களின் மூலம் பல்வேறு ஊடகங்களின் வாயிலாக வெளிப்படுத்துவதினை அடையாளம் காட்டுவதற்காக வழங்கப்பட்ட விருது இதுவாகும்.
- இந்த விருது மத்தியப் பிரதேச அரசாங்கத்தால் ஆண்டுதோறும் வழங்கப்படும் தலைசிறந்த விருதாகும். பண்டைய இந்தியாவின் புகழ்பெற்ற சமஸ்கிருத எழுத்தாளரான காளிதாசரை நினைவுகூறும் வகையில் பெயரிடப்பட்டது.
- 1980-ல் முதன்முதலாக இந்த விருது வழங்கப்பட்டது. முதலில் பாரம்பரிய இசை, நடனம், நாடகம் மற்றும் ப்ளாஸ்டிக் கலைகள் ஆகியத் துறைகளுக்காக ஒரு ஆண்டு இடைவெளியில் இந்த விருது கொடுக்கப்பட்டது.
- 1986-87லிருந்து ஒவ்வோர் ஆண்டும் இந்த நான்குத் துறைகளிலும் விருது வழங்கப்படுகிறது. இந்த விருது நான்குத் துறைகளினுள் ஒன்றில் முதன்மையான சாதனைப் படைத்தவருக்கு வழங்கப்படுகிறது.

- இந்த விருதைப் பெற்ற சில நபர்கள்
    - பண்டிட் ரவிசங்கர்
    - எம்.எப்.வுசைன்
    - பண்டிட் ஜஸ்ராஜ்
    - சம்பூ மித்ரா
    - ஹமீப் தன்வீர்
    - இப்ராஹிம் அல்காஷி மற்றும் பலர்.

# முக்கிய தினங்கள்

## உலக பாராளுமன்ற தினம் - ஜூன் 30

- உலக பாராளுமன்ற தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 30ஆம் தேதி உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.
- தேசியத் திட்டங்களில் பாராளுமன்றத்தின் பங்கு மற்றும் உத்திகளைக் கண்டுணர்தல் மற்றும் உலக மற்றும் தேசிய அளவில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமையை உறுதிப்படுத்துவது இவற்றின் நோக்கங்களாகும்.
- 2018-ஆம் ஆண்டு முதன்முறையாக உலக பாராளுமன்ற தினம் அனுசரிக்கப்படுகிறது.
- உலக பாராளுமன்ற தினமானது பாராளுமன்றங்களின் பங்கைக் கண்டுணரும் பொருட்டு ஐ.நா.பொது அவையில் மே 2018 ல் ஒரு தீர்மானம் நிறைவேற்றியதன் மூலம் கடைபிடிக்கப்படுகிறது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட தினமான ஜூன் 30ம் தேதி ஏறத்தாழ 130 வருடங்களுக்கு முன் இதேநாளில் 1889-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பாராளுமன்றங்களின் உலக அமைப்பான இண்டர் பார்லிமெண்ட்டரி யூனியனுடன் (IPU - Inter Parlimentary Union) ஒன்றிப் பொருந்துகிறது.

## சர்வதேச வெப்பமண்டலங்களின் தினம் - ஜூன் 29


- சர்வதேச வெப்பமண்டலங்களின் தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 29 அன்று உலகெங்கிலும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.



- உலகத்தின் வெப்பமண்டலப் பகுதிகளைப் பாதிக்கும் வகையில் உள்ள குறிப்பிட்ட சவால்கள் மற்றும் நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்தும் பிரச்சினைகள் ஆகியவற்றினைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் முக்கியக் குறிக்கோள் ஆகும்.
- சர்வதேச வெப்பமண்டலங்களின் தினமானது 14, ஜூன் 2016 அன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் தீர்மானம் ஏற்றுக் கொண்டதன் மூலம் நிறுவப்பட்டது.
- இந்தத் தினமானது நோபல் பரிசு பெற்ற ஆங் சான் சூகி-ன் "வெப்ப மண்டல நிலை அறிக்கை" (29 ஜூன், 2014) வெளியீட்டின் ஆண்டு நிறைவை பறைசாற்றுவதற்காகக் கடைபிடிக்கப்படுகிறது.

## தேசிய புள்ளியியல் தினம் - ஜூன் 29

- தேசியப் புள்ளியியல் தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 29 அன்று சமூகப் பொருளாதார திட்டமிடுதல் மற்றும் திட்டம் இயற்றுதலில் புள்ளியியலின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வினை மக்களிடையே ஏற்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்படுகிறது.
- 2018-ன் கருத்துரு - "பணித்துறையின் புள்ளியல் தரத்திற்கான உத்திரவாதம்" (Quality Assurance in official Statistics).




- புள்ளியியல் துறை, புள்ளியியல் அமைப்பு மற்றும் பொருளாதாரத் திட்டமிடுதல் ஆகியத் துறைகளில் மறைந்த பேராசிரியர் பிரசாந்த சந்த்ரா மகல்நோபிஸ் அவர்களின் பங்களிப்பினை பறைசாற்றுவதற்காக இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.
- 1933-ல் இவர் இந்தியாவின் முதல் புள்ளியியல் பத்திரிக்கையான சங்க்யாவைத் தொடங்கினார். அதுமட்டுமின்றி மகல்நோபிஸ் தொலைவு (Mahalnobis Distance) என்ற புள்ளியியல் அளவையினைக் கண்டறிந்ததற்காகவும் இவர் நினைவு கூறப்படுகிறார்.
- இவர் இந்தியப் புள்ளியில் நிறுவனத்தைத் தொடங்கினார். பெரிய அளவிலான மாதிரி ஆய்வுகளை வடிவமைக்க இவர் பெரும் பங்காற்றினார்.
- மத்திய அரசாங்கமானது புள்ளியியல் துறையில் முன்னாள் பேராசிரியர் PC மகலநோபிஸ்-ன் குறிப்பிடத்தக்க பங்குகளை நினைவுகூறும் பொருட்டு ஜூன் 29-ஆம் தேதியை தேசிய புள்ளியியல் தினமாக அனுசரிக்கிறது.
- இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இந்தியப் பொருளாதாரத்தில் மகலநோபிஸின்

கணித விளக்கங்களை நம்பியிருந்தது.

- இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமானது இந்தியாவில் கனரக தொழிற்சாலைகளை மேம்படுத்துவதை ஊக்குவித்தது. பின்னர் இது நேரு மகலநோபிஸ் மாதிரி அல்லது பொருளாதார வளர்ச்சியின் அடிப்படைத் தொழிற்சாலை யுக்தி என்று அழைக்கப்படுகிறது.

- - - - - - - - - - - - - - -